வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 903/ஆ4/2022 நாள். .05.2022

---

பொருள் : வேலூர் மாவட்டம் – பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாமாண்டு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வ மே 2022 – தேர்வு மைய தேர்வறைகளில் இருக்கை வசதி, மின்வசதி, தேர்வு அறையின் சுத்தம், குடி தண்ணீர் வசதி மற்றும் கழிவறை வசதி ஆகியவற்றை சரிபார்த்தல் – குறைகள் இருப்பின் உடனடியாக சரி செய்தல் – சார்பு.

பார்வை : அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.004119/எச்2/2022, நாள் 05.04.2022

- - -

வேலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பத்தாம் வகுப்பு மேல்நிலை முதலாமாண்டு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு மே 2022 அனைத்து பொதுத் தேர்வு மையங்களிலும் முதல் நாள் தேர்வு எழுதிய பிறகு தேர்வு எழுதவுள்ள அறைகளில் இருக்கை வசதி, மின்வசதி மற்றும் தேர்வு அறையின் சுத்தம் போன்றவை சரியாக உள்ளதையும், தேர்வு அறைக்கு எதிரே குடிதண்ணீர் வசதி மற்றும் கழிவறைகள் வசதி ஆகியவற்றையும் சரிபார்த்து ஏதேனும் குறைகள் இருந்தால் உடனடியாக சரி செய்திட வேண்டும் என அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், இதனை உறுதிபடுத்திக்கொள்ளுமாறு தேர்வு மைய முதன்மைக்கண்காணிப்பாளர்கள்/ துறை அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும், SCRIBE (சொல்வதை எழுதுபவர்)–ற்க்கு தனியறை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும். அந்தந்த பாடம் சார்ந்த SCRIBE நியமிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து உயர்/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் எலக்ட்ரிகல் மற்றும் பிளம்பிங் சார்ந்த பழுதுபார்ப்பு வேலைகள் இருப்பின் உடனடியாக கீழே கொடுக்கப்பட்டுள்ள PWD இன்ஜினியர் அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அனைத்து அரசு உயர்/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திரு பழனி – அலைபேசி எண் 9443032658
திரு யோகேஷ்– எலக்ட்ரிக்கல் – அலைபேசி எண். 9176681533

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1) அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்/ முதன்மைக்கண்காணிப்பாளர்கள்/ துறை அலுவலர்கள்
2) அனைத்து அரசு/நகரவை உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்

நகல்

வேலூர், மாவட்டக்கல்வி அலுவலர் அவர்களுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு

நகல்

அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.